செய்தி வெளியீடு எண்.862 நாள்.14.10.2008

# செய்தி வெளியீடு

## நெல்லை, திருவண்ணாமலை மாவட்டங்களில் உயிரிழந்த இரண்டு மாணவர்களின் குடும்பங்களுக்கு தலா 1 இலட்சம் ரூபாய் நிவாரண உதவி

## முதலமைச்சர் கலைஞர் ஆணை

திருநெல்வேலி மாவட்டம் ஆலங்குளம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் பூங்கோதை ஆலடி அருணா அளித்துள்ள மனுவின்படி, அவரது தொகுதிக்குட்பட்ட கீழப்பாவூர் ஒன்றியம் வடக்கு பூலாங்குளம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு படித்து வந்த பொன் முத்தையா என்பவரின் மகன் செல்வகுமார், மலேரியா காய்ச்சலைத் தடுப்பதற்காக வழங்கப்பட்ட மாத்திரைகளில் ஒன்பது மாத்திரைகளை ஒரே நேரத்தில் உட்கொண்டதால் சிகிச்சை பலனின்றி 10.10.2008 அன்று இறந்துள்ளார்.

அதேபோல திருவண்ணாமலை மாவட்டம், புதுப்பாளையம் ஒன்றியம், ஆலத்தூர் கிராமம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 10–ம் வகுப்பு படித்து வந்த மாணவன் மகாலிங்கம், பாம்பு கடியினால் பாதிக்கப்பட்டு திருவண்ணாமலை மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சையளித்தும் பலனின்றி 12.10.2008 அன்று இறந்துள்ளார்.

இந்த தகவல்கள் அறிந்து மிகவும் வேதனை அடைந்துள்ள முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உயிரிழந்த இரண்டு மாணவர்களின் பெற்றோர்களுக்கும், உற்றார் உறவினர்களுக்கும் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளதுடன், உயிரிழந்த இரண்டு மாணவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா 1 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 2 இலட்சம் ரூபாய் முதலமைச்சர் பொது நிவாரண நிதியில் இருந்து நிவாரண நிதி வழங்கிடவும் ஆணையிட்டுள்ளார்.

***

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.